**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 02.03.2026**
**OS. No. 118/2016**
**வழக்கு சாட்சி DW.1–முத்து , த/பெ.கோபால்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை செய்யப்படுகிறார் )

<u>பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி :</u>

1. 07.10.1968 ம் தேதிய பாகபிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். (மேற்கண்ட பாகபிரிவினை பத்திரத்தில் பி.வா.சா.1 ஆனவர் தரப்பினர் இல்லை என்று வாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்தன் பேரில் அவர்கள் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்படுகிறது).

2. 11.04.2001 ம் தேதிய என் பெயரிலான செட்டில்மெண்ட் பத்திரம் **பி.வா.சா.ஆ.2** ஆகும்.(மேற்கண்ட செட்டில்மெண்ட் ஆவணமானது சொத்தில் உரிமை எதுவும்இல்லாமல் ஏற்படுத்தப்பட்டதாக வாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்தன் பேரில் அவர்கள் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட ஆவணத்தில் கண்ட சொத்தானது 3 ம் பிரதிவாதியின் தந்தையின் தனிப்பட்ட சொத்து என்று 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது).

3. 27.05.2002 ம் தேதிய அடமான கடன் பத்திரம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகும்.

4. 21.06.1989 ம் தேதிய மேட்டூர் வட்டாட்சியர் அவர்களின் நடவடிக்கை அசல் **பி.வா.சா.ஆ.4** ஆகும்.( மேற்கண்ட ஆவணத்தில் முத்திரை எதுவும் இல்லை என்றும், அடித்தல், திருத்தலாக உள்ளதாக வாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்தன் பேரில் அவர்கள் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்படுகிறது.)

5. ச.எண்.57/5L ல் கண்ட சொத்திற்கு என் பெயரிலும், என் தகப்பனார் பெயரிலுள்ள 30.01.2023 ம் தேதிய பட்டா எண்.471 கணினி பதிவிறக்க நகல் **பி.வா.சா.ஆ.5** ஆகும். (மேற்கண்ட ஆவணம் வழக்கு நிலுவையிலிருந்தபோது ஏற்படுத்தப்பட்டதாக வாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்தன் பேரில் அவர்கள் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்படுகிறது.)

6. ச.எண்.57/5L, 1B, 5F க்குண்டான வாதியின் தந்தை கிருஷ்ணன் பெயரிலுள்ள சிட்டா உண்மை நகல் **பி.வா.சா.ஆ.6** ஆகும். மேற்கண்ட ஆவணம் வழக்கு நிலுவையிலிருந்தபோது ஏற்படுத்தப்பட்டதாக வாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்தன் பேரில் அவர்கள் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்படுகிறது. 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்கள் நகல் கோரி தாக்கல் செய்த தேதி தான் அதில் குறிப்பிடப்படும் என்றும், ஆனால் ஆவணம் வழக்கிற்கு முந்தையது என்று தெரிவிக்கப்பட்டது.)

7. ச.எண்.57/1B, 5C,5F க்குண்டான வாதியின் தந்தை கிருஷ்ணன் பெயரிலுள்ள பட்டா எண்.50 கணினி பதிவிறக்க நகல் **பி.வா.சா.ஆ.7** ஆகும். (மேற்கண்ட ஆவணம் வழக்கு நிலுவையிலிருந்தபோது ஏற்படுத்தப்பட்டதாக வாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்தன் பேரில் அவர்கள் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்படுகிறது. 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்கள் நகல் கோரி தாக்கல் செய்த தேதி தான் அதில் குறிப்பிடப்படும் என்றும், ஆனால் ஆவணம் வழக்கிற்கு முந்தையது என்று தெரிவிக்கப்பட்டது.)

8. தாவா சொத்தை காட்டக்கூடிய 30.12.2022ம் தேதிய அடங்கல் கணக்கு உண்மை நகல் பி.வா.சா.ஆ–8 ஆகும்.

(குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கு 13.03.2026ம் தேதி ஒத்தி வைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.